ந.க.எண். 24/2010 நாள்: 13.05.2010

<u>மல்லூர் பேரூராட்சி</u>
சேலம் மாவட்டம்

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

சேலம் மாவட்டம், மல்லூர் முதல்நிலை பேரூராட்சியில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 2010–11ம் ஆண்டில் கீழ்க்கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து மூடி முத்திரையிட்ட **ஒப்பந்தப்புள்ளிகள்** கோரப்படுகின்றன.

மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மல்லூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் (அ) அவரது அங்கீகாரம் பெற்றவரால், **02.06.2010** புதன்கிழமை பிற்பகல் **3.00** மணி வரை கீழ் காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகளை மூடிமுத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப் புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விவரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை **02.06.2010–ந்** தேதி புதன்கிழமை அன்று பிற்பகல் **3.30** மணி அளவில் செயல் அலுவலர் (அ) அவரது அங்கீகாரம் பெற்றவரால், வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர் முன்னிலையில் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **01.06.2010–ந்** தேதி செவ்வாய்க்கிழமை மாலை **5.00** மணி வரை அதற்குரிய தொகையை இணைப்பில் கண்டுள்ள பட்டியலின்படி தொகை செலுத்தி (விற்பனைவரி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். வேலைக்கு செலுத்த வேண்டிய டேவணித் தொகை **01.06.2010–ந்** தேதி மாலை **5.00** மணிக்குள் பேரூாட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் மற்றும் இதர விபரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

## <u>வேலைகள் விபர அட்டவணை</u>

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் | முன் வைப்புத் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி படிவத்தின் விலை ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 5,6,7 வார்டு கந்தசாமி கோவில் வீதியிலிருந்து புத்து கன்று வழியாக அம்மன் காலணி வரை மற்றும் பழைய காவல் நிலையம் முதல் மா.கோ.வீதி வரை தார்சாலை அமைத்தல்.. | 10.00 | 20000 | 3240 | 120 நாட்கள் |
| 2 | 9வது வார்டு அம்பேத்கார் நகரில் 30 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல். | 5.00 | 10000 | 1620 | 120 நாட்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| 3 | 14வது வார்டு கல்லியன் வலசு பகுதியில் 30 ஆயிரம் லிட்டர் மேல்நிலை நீர்தேக்க தொட்டி கட்டுதல். | 5.00 | 10000 | 1620 | 120 நாட்கள் |
| 4 | 1 வது வார்டு காந்தி சிலை அருகில் உள்ள ஊர்கிணற்றினை தூர் வாரி சுத்தம் செய்து , படித்துறை அமைத்து, சுற்று சுவர் அமைத்து விசை பம்ப் பொருத்துதல். | 5.00 | 10000 | 1620 | 90 நாட்கள் |
| 5 | 3 வது வார்டில் பாப்பான் காடு மற்றும் மாரியம்மன் கோவில் பின்புறம் சிமெண்ட் சாலை அமைத்தல் . | 3.20 | 6400 | 1620 | 60 நாட்கள் |
| 6 | 9–வது வார்டு கிருணணன் வீடு முதல் வீரபாண்டி ரோடு சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.20 | 2400 | 648 | 60 நாட்கள் |
| 7 | 2வது வார்டு பிச்சம்பாளையம் பகுதியில் விஸ்வநாதன் வீடு முதல் மல்லிகா செங்கோடன் வீடு வரை மற்றும் வெங்கடாஜலம் வீடு முதல் வசந்தா வீடு வரை சிமெண்ட் சாலை அமைத்தல். | 1.35 | 2700 | 648 | 60 நாட்கள் |
| 8 | சந்தைப்பேட்டையில் கடை மேடை, சிமெண்ட் தளம் மற்றும் தண்ணீர் வசதி செய்தல் . | 10.00 | 20000 | 3240 | 150 நாட்கள் |
| 9 | வார்டு எண் 10 ல் சுடுகாட்டில் சிமெண்ட் ரோடு, எரிமைடை, தண்ணீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் அமைத்தல். | 5.70 | 11400 | 3240 | 120 நாட்கள் |
| 10 | வார்டு எண் 12 ல் 1வது மைல் மேட்டில் பொது கழிப்பிடம் கட்டுதல் | 3.50 | 7000 | 1620 | 150 நாட்கள் |
| 11 | 11 வது வார்டு மேல் தெருவில் கழிப்பிடம் கட்டுதல். | 3.50 | 7000 | 1620 | 150 நாட்கள் |
| | மொத்தம் | 53.45 | 1,06,900 | 20736 | |

<u>நிபந்தனைகள்</u>

1. மேற்காணும் வேலைக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் மல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் 01.06.10 ம் தேதி மாலை 5 மணி வரை ரொக்கமாக செலுத்தி பெற்றுகொள்ளலாம்.
2. ஒப்பந்தப்புள்ளியின் வேலைக்கான முன்வைப்புத் தொகையை மல்லூர் பேரூராட்சி அலுவலகத்தில் 01.06.10 ந் தேதி மாலை 5 மணி வரை ரொக்கமாக செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.
3. எக்காரணம் கொண்டும் குறிப்பிட்டுள்ள காலக்கெடுக்கு மேல் ஒப்பந்தப் படிவங்கள் வழங்கப் படமாட்டாது. மற்றும் முன் வைப்புத் தொகை பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.
4. மூடி முத்திரையிடப்பட்ட ஒவ்வொரு ஒப்பந்தப்புள்ளி கவரின் மீதும் எந்த வேலைக்கு என்பதை எழுதி " செயல் அலுவலர் மல்லூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம்" என்ற முகவரிக்கு அனுப்புவோர் முகவரியுடன் தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்கவேண்டும்.
5. அனைத்து பணிகளும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் கண்டிப்பாக முடிக்கப்பட வேண்டும்.
6. வேலைக்கு தேவையான சிமெண்ட், தார் (80/100 Grade) மற்றும் இதர பொருட்களை ஒப்பந்ததாரர் தன் சொந்த செலவில் வாங்கி பயன்படுத்தி கொள்ள வேண்டும். அதற்கான உரிய பட்டியல்கள் சம்மந்தப்பட்ட பொறியாளரிடம் வேலைக்கான பட்டியல் தயாரிக்க கொடுக்கப்பட வேண்டும்.
7. இதில் குறிப்பிட்ட வேலையை எந்த சதவிகிதத்தில் செய்யப்படுகிறது என்பதை ஷெட்யூலில் எழுதி ஒப்பந்ததாரர்கள் கையொப்பமிட்டிருக்க வேண்டும்.
8. திருத்தங்கள் இருப்பின் அவற்றில் அருகே டெண்டர் தாரரின் கையொப்பமிட வேண்டும்.
9. ஒப்பந்தப்புள்ளி சமர்பிக்கும் ஒப்பந்ததாரர் இவ்வலுவலகத்தில் பதிவு செய்துள்ளவராகவும் நடப்பு ஆண்டிற்கு உரிமம் புதுப்பித்துள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
10. மதிப்பீட்டு தொகையில் கட்டிட தொழிலாளர் நல நிதி 0.03% க்கு வங்கி வரைவோலை எடுத்து வேலை உத்தரவு கிடைக்கப்பெற்றவுடன் சமர்பிக்க வேண்டும்.
11. ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக டெண்டர்கள் போட வேண்டும்.
12. ஒவ்வொரு வேலைக்கும் வேலை நடைபெறும் முன்னரும், நடைபெறும் போதும் மற்றும் முடிவுற்ற பின்னரும், புகைப்படங்கள் தலா 3 நகல்கள் ஒப்பந்ததாரரால் சமர்பிக்கப்பட வேண்டும்.
13. வேலை துவங்குமிடத்தில் வேலையின் விவரம் குறித்தான போர்டு ஒன்று வைக்கப்பட வேண்டும்.

14. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை http://townpanchayats.tn.gov.in/tender என்ற வலைதள முகவரியிலிருந்தும் பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம். ஆனால் வலைதளத்தில் பதிவு இறக்கம் செய்தாலும் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய ஒப்பந்த நமுனா கட்டணம் மற்றும் வைப்பு தொகையை செலுத்தி ரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் சமர்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்பிக்காதவரின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும்.
15. வேலை முடிவுற்றதும் பட்டியலில் 3% கூடுதல் பிணை வைப்பு தொகை ஒப்பந்ததாரர் செலுத்த வேண்டும். அல்லது பட்டியலில் பிடித்தம் செய்யப்படும். எதிர்பாராத விதமாக ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் நாள் அரசால் விடுமறையாக அறிவிக்கப்படின் மறு வேலை நாளில் பிற்பகல் 3.30 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும்.
16. நிர்வாக காரணங்களுக்காக ஒப்பந்தத்தை மாற்றி வைக்கவோ ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
17. இதர விபரங்கள் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் நேரில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்,
மல்லூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.
13/5/10

பெறுதல்

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
மல்லூர் பேரூராட்சி.

நகல்:

1. உதவி இயக்குநர், பேரூராட்சிகள், சேலம் மண்டலம் சேலம் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. உதவி செயற்பொறியாளர், பேரூராட்சிகள் நிர்வாகம், சேலம் மண்டலம், சேலம்.
3. இளநிலை பொறியாளர் ஓமலூர் பேரூராட்சி தொகுப்பு.
4. அலுவலக விளம்பரபலகைக்கு.
5. அலவலக கோப்பிற்கு.